# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் **29/2019** நாள் **20.12.2019**

### ஊரக உள்ளாட்சித் தேர்தல் - 2019

### இறுதி வேட்பாளர் பட்டியல்

தமிழகத்தில் 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் 07.12.2019 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 27 மாவட்டங்களில் உள்ள 91,975 பதவியிடங்களுக்கு 3,02,994 வேட்புமனுக்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டது. பெறப்பட்ட வேட்புமனுக்களில் 3,643 வேட்புமனுக்கள் உரிய பரிசீலனைக்குப் பின் நிராகரிக்கப்பட்டன. மேலும் 48,891 வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுக்களைத் திரும்பப் பெற்றனர். 18,570 பதவிடங்களுக்கு வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 2,31,890 வேட்பாளர்கள் இறுதிப்போட்டியில் தேர்தல் களத்தில் உள்ளனர்.

கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான 76,746 பதவியிடங்களுக்கு 2,09,847 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 1,994 வேட்புமனுக்கள் உரிய பரிசீலனைக்குப் பின்பு நிராகரிக்கப்பட்டன. மேலும் 18,818 வேட்பு மனுக்கள் திரும்பப்பெறப்பட்டன. 18,137 பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தடுக்கப்பட்டுள்ளனர். கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்கான இறுதிப்போட்டியில் 1,70,898 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கிராம ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான தேர்தலில் 9,624 பதவியிடங்களுக்கு 54,757 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 753 வேட்புமனுக்கள் உரிய பரிசீலனைக்குப் பின்பு நிராகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 17,983 வேட்புமனுக்கள் திரும்பப்பெறப்பட்டன. 410 பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வு

செய்யப்பட்டுள்ளனர். கிராம ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான தேர்தலில் 35,611 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தலில் 5,090 பதவியிடங்களுக்கு 34,398 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் 787 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. மேலும் 10,812 மனுக்கள் திரும்பப்பெறப்பட்டன. 23 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 5067 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு 22,776 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றனர்.

515 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு 3,992 வேட்புமனுக்கள் பெறப்பட்டன. இவற்றில் உரிய பரிசீலனைக்கு பின்னர் 109 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மேலும் 1,278 வேட்புமனுக்கள் திரும்பப்பெறப்பட்டன. 515 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு 2,605 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

20/12/19

மக்கள் தொடர்பு அலுவலர்